12

# VELLORE DISTRICT

## காலாண்டுத் தேர்வு - செப்டம்பர் - 2024

## பொருளியல்

## விடைக் குறிப்புகள்

*PREPARED BY*
**Dr. C. SUDHAKAR M.A., M.Phil., B.Ed.,Ph.D**
**GBHSS USSOOR**
**K. SUDHAKAR M.A., B.Ed.,**
**GHSS PANAMADANGI**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1** | ஆ. | வருவாய் கோட்பாடு | **11** | அ | விலைகள் அதிகரிப்பு |
| **2** | அ | குடும்பங்களும் நிறுவனங்களும் | **12** | ஆ | பணத்தின் சுழற்சி வேகம் |
| **3** | இ | வேளாண்மை | **13** | ஈ | இந்திய ரிசர்வ் வங்கி |
| **4** | அ | Net National Product | **14** | இ | ஜூலை 1982 |
| **5** | அ | சுழியம் | **15** | அ | ரூ.500 ரூ.1000 |
| **6** | ஈ | C+S+T+Rf | **16** | இ | ஏற்றுமதி – இறக்குமதி |
| **7** | அ | C / Y | **17** | ஈ | அ,ஆ,இ மூன்றும் |
| **8** | அ | 1 | **18** | ஆ | அணு ஆற்றல் |
| **9** | ஆ | கீன்ஸ் | **19** | அ | தாள் தங்கம் |
| **10** | இ | மும்பை | **20** | அ | 2 |

21. பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும்.

22. ஒரு பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள தொடர்பினை விளக்குவது ஆகும்.

23. NNP = GNP - தேய்மான கழிவு
NDP = GDP - தேய்மானம்

24. கீன்ஸின் கூற்றுப்படி "முழு வேலை நிலை என்பது விருப்பமில்லா வேலையின்மை இல்லாமல் இருப்பது ஆகும்"

25. விளைவு தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கின்ற பணத்தின் அளவு ஆகும். எனவே விளைவு தேவை தேசிய வருவாய்க்கு சமமாக இருக்கும்.
**ED = Y = C = I =** வெளியீடு=வேலைவாய்ப்பு

26. தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும், முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். **$K = \Delta Y/\Delta I$**

**27.** நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்ட நெகிழி பணம் நடைமுறையில் காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும். எ. கா. கடன் அட்டை, பற்று அட்டை, ரொக்க அட்டை.

**28.** பி.ஏ.சாமுவேல்சன் "மைய வங்கியானது வங்கிகளின் வங்கி ஆகும். மேலும் நாட்டின் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதும் மீப்பெரு மதிப்பு பணத்தை கொண்ட அமைப்பு" என்று வரையறை செய்துள்ளார்.

**29.** பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பிரிவாகும்.

**30.** 1. சார்க் தலைமையகம் நேபாள் தலைநகரம் காத்மாண்டு-ல் உள்ளது.
2. ஜனவரி 16,1987-ல் செயல்படத் துவங்கியது.

**31.** **1. இல்லத்துறை**

இது உற்பத்தி காரணிகளை அளிக்கும் துறை ஆகும். இதன் மூலம் வருவா யை பெறுகிறது மற்றும் அதன் வருவா யை நிறுவனம் தயா ரிக்கும் பொ ருட்கள் மற்றும் பணிகளை வா ங்க பயன்படுத்துகிறது.

**2. நிறுவனத்துறை**

இது பொ ருள் மற்றும் பணிகளை இல்லத் துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகிறது. இல்லத் துறைக்கு சொ ந்தமா ன உற்பத்திக் காரணிகளை பணியமர்த்துகிறது.

**32.** 1. ஓர் ஆண்டில் ஒரு நா ட்டில் வசிக்கும் ஒரு நபரின் சரா சரி ஆண்டு வருமா னம் ஆகும்.

2. தேசிய வருமா னத்தை மக்கள் தொ கையா ல் வகுக்கக் கிடைப்பது தலா வருமா னம்.

3. தலா வருமா னத்தை தலை வீத வருமா னம் என்றும் அழைக்கலாம்.

**33.** 1. **பருவகால வேலையின்மை:** ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும்.

**2. உடன்பாடில்லா வேலையின்மை:** உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் ஏற்படுகிறது.

**3. படித்தவர் வேலையின்மை:** சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை.

**34.**

| கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|
| 1. குறுகிய கால சமநிலை | 1. நீண்டகால சமநிலை |
| 2. சேமிப்பு கெடுதல் | 2. சேமிப்பு நல்லது |
| 3. வட்டி வீதம் மாறிக்கொண்டே உள்ளது. (FLOW) | 3. வட்டி வீதம் மா றாதது. (STOCK) |
| 4. தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது. | 4. அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்குகிறது. |
| 5. வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டு கொடுப்பதற்கா ன வெகுமதி. | 5. வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி. |

**35.** மிகைப் பெருக்கி எளிய பெருக்கியை விட சிறந்தது. ஏனெனில் எளிய பெருக்கி தன்னிச்சை முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும். ஆனால் மிகைப் பெருக்கி தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.

**36.** **1. தேவை இழுப்பு பணவீக்கம்**

பொருட்களுக்கான அளிப்பு நிலையாக இருந்து தேவை அதிகரித்தால் விலைவாசி உயரும்.

**2. செலவு உந்து பணவீக்கம்**

உற்பத்தியில் மூலப்பொருட்களின் செலவு உயரும் பொழுது பொருட்களுக்கான விலை அதிகரிக்கின்றது.

**37.** 1. விவசாயம், சிறு தொழில், குடிசை மற்றும் கிராம தொழிலாளர்களுக்கு மறுகடன் வழங்குகிறது.

2. மா நில அரசுக்கு 20 ஆண்டு நீண்ட கால கடன் வழங்குகிறது.

3. தொ டக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தவிர்த்து அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியினை செய்கிறது.

**38.** 1. கருப்புப் பணத்தை ஒழிப்பது.

2. இலஞ்சத்தை தடுப்பது.

3. தீவிரவா தத்திற்கு பணம் செல்வதை தடுப்பது.

4. கள்ள பணத்தினை தடுப்பது.

**39.** 1. விற்பனையை விரிவுபடுத்துதல்

2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்

3. வா ணிகப் பரவலாக்கம்

4. போட்டி இடர்களை குறைத்தல்

**40.** 1. அவசரகால கையிருப்பு வசதியை உருவாக்கியதால் உறுப்பினர் நாடுகளின் பொருளாதார மற்றும் நிதித்துறைகளில் ஒன்றிணைந்து செயல்படுதலை பலப்படுத்தியது ஒரு சாதனை ஆகும்.

2. பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கியை சீனாவின் ஷாங்காய் தலைமை அலுவலகத்துடன் செயல்படும் விதமாக பிரிக்சின் 6வது மாநாட்டில் முடிவு செய்தபடி அமைத்தது. ஒரு சாதனையாகும்.

3.பொருளாதார பலமும் மக்கள் தொகை வளமும், பிரிக்ஸ் நாடுகள் உலக அளவில் பன்னாட்டு உறவு நிர்வாகத்தில் கூடுதல் ஆதிக்கம் பெறும் நிலைமையை பெற்றுள்ளது.

**41.அ).**

| தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|
| உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியா ர் உரிமை | பொ து உரிமை | தனியா ர் மற்றும் பொ து உரிமை |
| பொ ருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| மைய பிரச்சினைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்ட முறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பா டு மட்டும் | முழு ஈடுபா டு | குறைந்த பங்கு |
| வருவா ய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| பொ ருளாதார சுதந்திரம் | முழுமையா ன சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பா டுடன் சுதந்திரம் |
| முக்கிய பிரச்சினை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

**(அல்லது)**

**41. ஆ.)1. சூழற்சி சமனற்ற நிலை**: வாணிப சுழற்சியின் விளைவாக அயல்நாட்டு செலுத்து சமநிலையை இவை குறிக்கும்.

**2. நீண்டகால சமனற்ற நிலை:** நாடுகள் பொருளாதார வளர்ச்சி நிலையில் முன்னேறும் பொழுது நீண்டகால தலைகீழ் மாற்றங்கள் நிகழ்வதால் உண்டாகும்.

**3. கட்டமைப்பு சமனற்ற நிலை:** நாட்டின் பொ ருளாதார கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையை இவை குறிக்கும்.

**42. அ).தேசிய வருவாய் :** ஒரு குறிப்பிட்ட ஆண்டில், ஒரு குறிப்பிட்ட நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பே தேசிய வருவாய் எனப்படும்.

**1. உற்பத்தி முறை :** ஒரு நாட்டின் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளில் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**2. வருவாய் முறை :** உற்பத்தி நிலைகளில் உற்பத்தி காரணிகள் பெற்ற அனைத்துவித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம்.

**3. செலவு முறை :** ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவா ய் கணக்கிடப்படுகிறது.

$$GNP=C+I+G+(X-M)$$

**C**- தனியார் நுகர்வு செலவு **I** - தனியார் முதலீட்டு செலவு **G** - அரசின் கொள்முதல் செலவு **(X-M)** - நிகர ஏற்றுமதி

**(அல்லது)**

**42. ஆ.)**

**அ.) சார்க் (SAARC)**

1. தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்காக துவங்கப்பட்ட அமைப்பு சார்க் ஆகும்.
2. டிசம்பர் 8, 1985-ல் அமைக்கப்பட்டது. ஜனவரி 16, 1987-ல் நேபாள தலைநகர் காத்மாண்டுவை தலைமைச் செயலகமாகக் கொண்டு செயல்படத் துவங்கியது.
3. வங்காளதேசம், பூட்டான், இந்தியா , மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய 7 நாடு உறுப்பு நாடுகளாகும்.

**ஆ.) பிரிக்ஸ் ( BRICS )**

1. வேகமாக வளர்ந்து வரும் 5 நாடுகளின் முதல் எழுத்துக்களின் சுருக்கப் பெயர் பிரிக்ஸ் (BRICS).
(a.) பிரேசில் (b.) ரஷ்யா (c.) இந்தியா (d.) சீனா (e.) தென் ஆப்பிரிக்கா ஆகிய நா டுகள்.
2. சீனாவின் ஷாங்காய் நகரில் பிரிக்ஸ்-ன் தலைமை அலுவலகம் செயல்படுகிறது.
3. வணிக ஒத்துழைப்பை மேம்படுத்துதல் வளரும் நா டுகளைக்கென தனியான பன்னாட்டு அமைப்பை உருவாக்குவது. பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கி தொடங்கப்பட்டது. வளரும் நாடுகளில் அமைதி மற்றும் பாதுகாப்பு இதன் முக்கிய செயல்பாடாகும்.

www.Padasalai.Net

**43. அ).**

| கீன்ஸ் கோட்பாடு | தொன்மை கோட்பாடு |
|---|---|
| 1. குறுகிய கால சமநிலை | 1. நீண்டகால சமநிலை |
| 2. பணம் பரிவர்த்தனைக்கும் சேமிக்கவும் உதவும் | 2. பணம் பரிவர்த்தனைக்கு மட்டும் உதவும் |
| 3. அரசின் தலையீடு அதிகம் | 3. அரசின் தலையீடு குறைவு |
| 4. குறை வேலை வா ய்ப்பு நிலவும் | 4. முழு வேலை வா ய்ப்பு நிலவும் |
| 5. பற்றாக்குறை வரவு-செலவு அறிக்கை சிறந்தது | 5. உபரி-வரவு செலவு அறிக்கை சிறந்தது |
| 6. வட்டி வீதம் மா றும் | 6. வட்டி வீதம் மா றாது |
| 7. தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | 7. அளிப்பு அதன் தேவையை தானே உருவா க்கும் |
| 8. சேமிப்பு கெடுதல் | 8. சேமிப்பு நல்லது |
| 9. பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு பேரியல் அணுகுமுறை | 9. பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நுண்ணின அணுகுமுறை |

**(அல்லது)**

**43. ஆ.)**1. உறுப்பு நாடுகளிடையே பரிவர்த்தனையில் பணவியல் ஒத்துழைப்பை மேம்படுத்துவது.

2. பன்னாட்டு வாணிபம் வேகமா கவும் சமச்சீராகவும் வளர உதவுவது.

3. உறுப்பு நாடுகள் போட்டிப் போட்டுக்கொ ண்டு பணம் மதிப்பிறக்கம் செய்வதை தடுத்து நாணய மாற்று விகிதம்
நிலையாக இருக்கச் செய்தல்.

4. உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவணிக் கட்டுப்பாடுகளை குறைத்தல் அல்லது நீக்குதல்.

5. பன்னாட்டு நீர்மை பிரச்சனைக்கு தீர்வு காண்பது.

**44. அ).பெருக்கி :** தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும், முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம்.

$K = \frac{\Delta Y}{\Delta I}$ **பெருக்கியின் மதிப்பு MPC - யை பொ றுத்து அமையும் .**

பெருக்கி $(K) = \frac{1}{1-MPC}$ (அல்லது) $K = \frac{1}{MPS}$

**எடுகோள்கள்:**

1. தூண்டப்பட்ட முதலீடு இல்லை
2. MPC நிலையாக இருக்கும்
3. பெருக்கியின் செயல்பாட்டில் கால இடைவெளி இல்லை
4. நாடு மூடிய பொருளாதாரமாகும்
5. விலையில் மாற்றம் இல்லை
6. முழு வேலை வாய்ப்பு நிலவுகிறது
7. நுகர்வு நாட்டம் வருமானத்தை சார்ந்து அமையும்
8. தன்னிச்சையான முதலீட்டில் மாற்றம் இல்லை

**பெருக்கி செயல்படும் விதம்:**

**1.** அரசு ₹100 கோடி பொது பணிக்காக கூலி, இதர பொருட்கள் வாங்குவதற்காக செலவிடுகிறது எனக் கொள்வோம்.

2. இந்த ₹100 கோடி உழைப்பாளர்களுக்கும் பொருட்களை அளித்தவர்களுக்கும் வருமானமாக அமையும்.

3. இங்கு MPC 0.8(80%) எனக் கொண்டா ல் ரூபா ய் ₹80 கோடியை நுகர்வு செலவுக்கும் மீதம் ரூபா ய் ₹20 கோடியை சேமிக்கவும் செய்வர்.

4. இதில் மேற்காண் வருமானம் பெற்றவர்களின் MPC 0.8 எனில் ரூபாய் ₹80 கோடி, ₹64 கோடி நுகர்வு செலவுக்கும் மீதம் ரூபாய் ₹16 கோடியை சேமிக்கவும் செய்வர்.

5. இந்த வழியில் நுகர்வு செலவானது ஒரு சங்கிலித் தொ டர் போன்று சென்று கொண்டே இருக்கும்.

**(அல்லது)**

**44. ஆ.)1. பண அதிகார அமைப்பு :** வங்கி அமைப்பை நிலைப்படுத்துகிறது.

**2. காகிதப் பண வெளியீடு :** இது காகித பணத்தை அச்சிட்டு வெளியிடும் உரிமை பெற்றது.

**3. அரசுக்கான வங்கி :** இது மத்திய மா நில அரசுகளுக்கான வங்கியா கும்.

**4. வங்கிகளின் வங்கி** : அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியா கும்.

www.Padasalai.Net

**5. கடன் வழங்குவதில் கடைசி புகலிடம் :** வணிக வங்கிகளுக்கு நிதிச் சிக்கல்கள் ஏற்படும் பொ ழுது கடனை வழங்கி உதவுகிறது.

**6. அந்நியச் செலாவணியின் பா துகாவலர் :** வெளிநா ட்டு பண இருப்புகளை பா துகாக்கும் பணியினை செய்கிறது.

7. பணவியல் மற்றும் இதர தகவல்களை வெளியிடுகிறது.

8. பொ ருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது.

**45. அ).**

| வ. எண் | மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தி திறன்(MEC | முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தி திறன்(MEI) |
|---|---|---|
| 1 | இது மூலதனத்தின் அளிப்பு விலையை பொ றுத்து அமைகிறது. | மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மா ற்றங்கள், விலையை தூண்டும் மா ற்றத்தைப் பொ றுத்து அமைகிறது |
| 2 | ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொ ள்ளாமல் ஒவ்வொ ரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவை குறிக்கிறது. | ஆரம்ப மூலதனத்திற்கு பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தை காட்டுகிறது. |
| 3 | வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது. | வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது |
| 4 | இது ஒரு "இருப்பு" கருத்துரு (stock). | இது ஒரு ஓட்டக் (FLOW) கருத்துரு. |
| 5 | ஒவ்வொ ரு வட்டிவீத அளவிலுமா ன உத்தம மூலதனஇருப்பை இது நிர்ணயிக்கிறது. | கொ டுக்கப்பட்ட மூலதன இருப்பில் ஒவ்வொ ரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |

**(அல்லது)**

**45.ஆ.) 1. வாணிபச் சூழல் வேலையின்மை:** இது போதுமான அளவு விளைவுத் தேவை இல்லாதபோது நிகழ்வதாகும்.

**2. பருவகால வேலையின்மை:** ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும்.

**3. உடன்பாடில்லா வேலையின்மை:** உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் ஏற்படுகிறது.


**4. படித்தவர் வேலையின்மை:** சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை.

**5. மறைமுக வேலையின்மை:** உழைப்பாளர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறன் பூஜியம் ஆகும்.

**46. அ)** இது மிகவும் பழமையா ன கோட்பா டு.

1588-ல் டா வன்ஷட்டி என்ற இத்தாலிய பொ ருளியல் அறிஞரால் முன்மொ ழியப்பட்டது.

1911-ல் அமெரிக்கப் பொ ருளியல் அறிஞர் இர்விங் ஃபிஷர் தனது "பணத்தின் வா ங்கும் சக்தி" என்ற நூலில் இக்கோட்பா ட்டை நவீன வடிவத்தில் கொ டுத்துள்ளார்.




**விளக்கம்:**

1. இக்கோட்பா ட்டை பரிவர்த்தனை சமன்பா டு வா யிலாக இர்விங் ஃபிஷர் விளக்கினார்.
2. பண அளிப்பின் அளவில் மா ற்றம் அடையும்போது விலையும் மா ற்றம் அடையும்.

**சமன்பா டு : MV = PT**

**M** - மொ த்த பண அளவு. **P** - பொ து விலை மட்டம்.
**V** - பணத்தின் சுழற்சி வேகம். **T** - வா ணிப அளவு

3. குறிப்பிட்ட கால மொ த்த பண அளிப்பு (MV) மொ த்த பணத்தேவை (PT) மதிப்பிற்கு சமம்.

4. இது காகித பணத்தை மட்டுமே கணக்கில் கொ ண்டுள்ளது.

5. நவீன வா ணிப பொ ருளாதாரத்தில் காகித பணத்துடன் வங்கி கேட்பு வைப்புகள், கடன் பணம், அவைகளின் சுழற்சி வேகம் முக்கிய பங்கு வகிக்கிறது.

**ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு விரிவானச் சமன்பாடு**

$$PT = MV + M^1 V^1 \text{ அல்லது } P = \frac{MV + M^1\ V^1}{T}$$

**வரைபட விளக்கம்:**

**<u>வரைபடம் A .</u>** விலைமட்டச் சா ர்பு OP = f(M) நேர்கோடு வரைபடத்தின் தோற்றுவா யிலிருந்து 45°அமையும்போது பணத்தின் அளவு, விலை மட்டம் இடையே நேரடி சமவிகித உறவை விளக்குகிறது.

**<u>வரைபடம் B .</u>** பணமதிப்பு சா ர்பு IP = f(M) வளைகோடு மேலிருந்து கீழ்நோக்கி சரிந்து பண அளவிற்கும் பண மதிப்பிற்கும் உள்ள எதிர்மறை தொ டர்பை சுட்டிக்காட்டுகிறது.

**(அல்லது)**

**46. ஆ.)**

**I. முதன்மைப் பணிகள்**

**அ. ) வைப்புகளை ஏற்றுக்கொ ள்ளுதல்.**

(i) கேட்பு வைப்புகள்: எப்பொ ழுது வேண்டுமா னாலும் பணத்தை பெறலாம்.

1. சேமிப்பு கணக்கு 2. நடப்பு கணக்கு

**(ii) கால வைப்புகள்:** குறிப்பிட்ட காலம் பெறமுடியா து. கூடுதல் வட்டி வழங்கப்படும்.

1. நிலை வைப்பு 2. தொ டர் வைப்பு

**ஆ) கடன் வழங்கல்:** ரொ க்க கடன், மா ற்றுச்சீட்டு தள்ளுபடி, மிகைப்பற்று.

**II. இரண்டா ம் நிலை பணிகள்**

**அ ) முகமைப் பணிகள் :**

1. காசோலைகளை பணமா க்குதல்.
2. வருமா னத்தை பெறுதல்.
3. செலவுகளை செலுத்துகிறது.

**இ ) இதர பணிகள் :**

1. பண அளிப்பு
2. கடன் உருவா க்கம்
3. புள்ளி விபரங்களை திரட்டுதல்.

**ஆ ) பொ துப் பயன்பா ட்டு பணிகள் :**


1. பா துகாப்பு பெட்டக வசதி.
2. பயணக் காசோலை வழங்குதல்.
3. அந்நிய செலாவணியை கையா ளுதல்.
4. கடன் உறுதியளிப்பு கடிதம்.
5. பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்.
6. மின்னணு வங்கி

**47. அ).1. பூரிப்பு :** அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்ச நிலையில் இருக்கும்.

**2. பின்னிறக்கம் :** பணச்சந்தை நடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.

**3. மந்தம் :** மிக மோசமான கட்டம். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் தேக்கமடையச் செய்யும்.

**4. மீட்சி :** அரசால் செய்யப்படும் முதலீடுகள் மூலம்உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருவாய், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.




**47. ஆ.)1. தேசிய வருவாய்:** தேசிய வருவா ய் கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுப்பாய்வின் அடிப்படை அம்சங்கள் ஆகும்.

**2. பணவீக்கம்:** பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும்.

**3. வாணிப சுழற்சி:** மொத்த பொருளாதார காரணிகளை அடிப்படையா கக் கொண்டு ஒரு நாட்டின் வாணிபச் சுழற்சி மாற்றங்களை தெரிந்து கொள்ள முடிகின்றது.

**4. வறுமை மற்றும் வேலையின்மை:** வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. இப்பிரச்சனைக்கு தீர்வு காண வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொ ள்ளவும் பேரியல் பொ ருளியல் உதவுகிறது.

**5. பொருளாதார வளர்ச்சி:** பேரியல் பகுப்பாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும்முன்னேற்றம் அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.